**<u>O.S.No. 400/2019</u>**

**<u>PW3 :</u>** <u>மனோகரன்</u> தேதி 2.3.2026

<u>வாசா 3 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் விவசாயம் செய்கிறேன். விவசாயத்திற்கான வரவு செலவு கணக்கு எதுவும் இல்லை. வருமான வரி கட்டுவதில்லை. 1ம் பிரதிவாதி முனியப்பனுக்கு கடன் கொடுத்ததை அவர் திரும்ப செலுத்தவில்லை என்பதால் வாதிகளுடன் சேர்நது இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். 2016 கடன் கொடுத்தேன். ரூ.5 லட்சம் கொடுத்தேன். தேதி ஞாபகத்தில் இல்லை. பணம் கொடுத்தற்கான வேறு ஆவணம் எதுவும் இல்லை. 2ம் பிரதிவாதி ஜெகதீசன் மற்றும் 3ம் பிரதிவாதி கம்பெனியை எனக்கு தெரியாது. கடன் கொடுப்பதற்கு முன்பாக வில்லங்கம் பார்த்தீரா என்றால் பார்த்தேன். சொத்தின் பேரில் வேறு கடன் உள்ளதா என்று நான் பார்க்கவில்லை. வில்லங்கம் பார்த்தற்கான வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி முனியப்பனுக்கு பணத்தை திருப்பி கொடுக்கும் படி அறிவிப்பு ஏதும் அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. சொத்து விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த சொத்தில் யார் இருக்கிறார்கள் என்பதும் தெரியாது. 3ம் பிரதிவாதி பைனான்சில் ஜெகநாதன் சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி ஜெகதீசன் தாவா சொத்தின் பேரில் கிரைய ஒப்பந்தம் பதிவு செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி முனியப்பனுக்கு வேண்டப்பட்டவர்கள் என்றும் 2 மற்றும் 3 பிரதிவாதிகளை ஏமாற்றும் எண்ணத்தில் அடமான பத்திரம் நாங்களாக தயாரித்து கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ரூ.5 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு பொருளாதார வசதி இல்லை என்று சொன்னால் சரியல்ல என் மகன் **IT** ல் பணிபுரிவதாலும் எனக்கு வீட்டு வாடகை வருவதாலும் அந்த தொகையை கொண்டு கடன் கொடுத்தேன். என் மகன் **IT**

பணிபுரிவதாகவோ வீட்டு வாடகை வருவதாகவோ ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்தின் பேரில் நான் அடமான கடன் வைத்ததாக சொல்லப்படுவது பொய் என்றும் நாங்கள் கோருவது போல் இவ்வழக்கில் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் 2ம் பிரதிவாதியை பொறுத்து தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

முனியப்பனுக்கு கடன் கொடுப்பதற்கு முன்னால் சொத்து எவ்வகையில் பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணத்தை பார்த்தீரா என்றால் பார்த்தேன். வீட்டை காண்பித்தார். கடன் கொடுப்பதற்கு முன்னால் நான் சொத்திற்கான வில்லங்கம் எதுவும் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல பார்த்தேன். முனியப்பனுக்கு சொத்து எந்த வகையில் பாத்தியம் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் ஜெகநாதனிடம் இருந்து கிரையம் வாங்கியதாக தெரிந்து கொண்டேன். 16.11.2005 ம் தேதியில் ஜெகநாதன் 3ம் பிரதிவாதியிடம் ஒரு உரிமை ஒப்படைப்பு ஆவணம் எழுதி கொடுத்து அடமான கடனாக ரூ.445000/- வாங்கியிருந்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்களை தெரிந்து கொண்டே நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படுவது தவறு என்றும் 3ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. ஜெகதீசன் மற்றும் முனியப்பனும் சம்மந்தி உறவு முறை என்றால் அது எனக்கு தெரியாது. நான் அடமான கடனை ஏற்படுவதற்கு முன்பு மூல ஆவணத்தை பார்த்து கடன் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த மூல பத்திரம் ஜெகநாதனிடம் இருந்தது என்றும் அதை அவர் 3ம் பிரதிவாதியிடம் அடமானம் வைத்து கடன் பெற்றிருந்தார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. சொத்தின் பேரில் ஏற்கனவே வில்லங்கம் இருப்பதை தெரிந்து கொண்டே மேலும் மேலும் வில்லங்கம் ஏற்படுத்த நாங்களும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளும் சேர்ந்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டதாக

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய அடமான கடன் 3ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.